ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தூப்புக்காரி புதினம் காட்டும் சமூகச் சிக்கல்கள்

முனைவர் இரா.திருப்பதி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) சேலம்-7

## முன்னுரை

தமிழில் இலக்கியம் வளர்ந்து பெருகியது. இலக்கியங்களில் கற்பனை மிகுந்த வேகமான வளர்ச்சியைக் காட்டுவது புதினமாகும். மாறிவரும் இன்றைய சமூகச் சூழலுக்கு ஏற்ப மக்களின் மனதோடு ஒன்றிவரும் இலக்கியம் புதினமாகும். மனித வாழ்வியலையும், மனங்களையும் வெளிப்படுத்தும் நோக்கிலேயே புதினங்கள் இன்றுவரை வெளிவருகின்றன. 'தூப்புக்காரி' புதினம் தூப்புத்தொழில் தொழிலாளர்களின் சிக்கல்கள், வாழ்க்கைத்தரம், உணர்வுகள், வேலைபளு, பொருளாதாரச் சுரண்டல், அதிகாரம் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக மலர்வதி அவர்களின் 'தூப்புக்காரி' புதினம் அமைந்துள்ளது.

## புதினங்களும் சமுதாயமும்

புதினங்களில் வரலாற்று புதினம், துப்பறியும் புதினம், சமூகப்புதினம் என பலவகைகள் உண்டு. இவற்றில் தூப்புக்காரி புதினமானது தூப்புத்தொழில் செய்யும் தொழிலாளர்களின் சமூகச் சிக்கல்களை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டதால் இது சமூகப் புதினம் என்ற வகையின சார்ந்ததாகும்.

> "அன்றாட மக்கள் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டவை. சமூகப்புதினங்கள், சமுதாயச் சிக்கல் பிரச்சாரம், சீர்திருத்தம் என்னும் போக்குகளில் இவ்வகைப் புதினங்கள் இயலும்"1

சமுதாய உணர்வுதான் மனிதனை விலங்கினத்திலிருந்து பிரித்துக் காட்டுகிறது. உயிரினங்களிலே ஆறறிவு ஆற்றலையும் செய்யக்கூடிய திறமையையும் பெற்றிருக்கிறான். சமுதாயத்தில் மனிதன் பிறர் உதவியின்றி தனித்து வாழ முடியாது. மக்களின் தொகுதியே சமுதாயம் ஆகும்.

> "சமுதாயம் என்ற சொல் வடமொழி கலந்த தமிழ்ச்சொல்லாகும். இது சமு + தாயம் எனப்பிரியும். சமு என்றால் கூட்டம்; தாயம் என்பதற்கு வந்துள்ளது. எனவே சமுதாயம் என்பதற்குத் தாய்வழி பெருகிய கூட்டம் என்று பொருள் கொள்ளலாம்"2

தூப்புத்தொழிலானது சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டதொரு தொழிலாக பார்க்கப்படுகிறது. எனவே இத்தொழில் செய்வோரின் வாழ்க்கைத்தரம் கீழ்நோக்கி ஏழ்மை நிலையிலேயே உள்ளது. இத்தகைய தாழ்ந்த நிலையில் வாழும் விளிம்புநிலை மக்களின் சமூகச் சிக்கல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## வறுமை

சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய அவலம் வறுமை பொருளாதார அடிப்படையில் வேறுபாடு தோன்றியது. பொருளாதாரத்தில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டு அது தொடர்ந்து கொண்டே வருகிறது.

வறுமை இருக்கின்ற இடத்தில் மட்டுமல்ல செல்வம் இருக்கும் இடத்தில் பலவிதமான பாவச் செயல்கள் நடைபெறுகின்றன என்ற அறிஞர் வினோபாவின் கருத்து போற்றத்தக்கது. வறுமை வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமின்றி வளர்ந்த நாடுகளிலும் பலவகையான சமுதாயச்

சிக்கல்களுக்குக் காரணமாக அமைகின்றது என்பதை உணர்த்துகின்றது. வறுமையின் கொடுமையை பற்றி புதின ஆசிரியர் புதினத்தின் வழியே சிறப்பாக விளக்கியுள்ளார்.

"பசி என்று வந்தவர்க்குப் புசி என்று
ஒரு பிடி கொடுதம்துப் பாரப்பா"3

உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவை யாவர்க்கும் கொடு என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கூறியுள்ளார்.

"யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் யல்லால் வேறொன்றறியேன் பராபரமே"4

எனவே தாயுமானவர் வறுமையின் கருத்தை வெளிப்படையாக உணர்த்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூவோர்
தொகுத்த வற்றுள் எல்லாம் தலை"5

கிடைத்ததைப் பலருக்குப் பகிர்ந்து உண்ணக் கொடுத்து வாழ வே;டும்; சோம்பல் கூடாது. எவரையும் வெறுக்கக்கூடாது. சான்றோர்கள் அஞ்சும் அறஞ்சாராச் செயல்களை செய்யக்கூடாது என்றும் கூறியுள்ளார்.

திருமண நிகழ்ச்சியில் எச்சில் இலை எடுக்கும் வேலைக்கு சென்றால் இரண்டு நாட்களுக்கு சாப்பாடு கிடைக்கும் நூறு ரூபாய் பணம் கிடைக்கும் என்று நினைத்துதான் வேலைக்குச் சென்றனர். ஆனால் இப்படி அவமானம் நிகழும் என்று நினைக்கவில்லை எதிர்பார்க்காத நேரத்தில் நடந்து விட்டது. ஹோஸ்சிலியும் கனகமும் அவமானத்தில் மனம் உடைந்து புழுவாய்த் துடித்தார்கள்.

"வீட்ல ஒருபிடி சரி இல்ல, இப்டி வந்தா ரெண்டு நாளத்த சோறுப்பாடு தீரும். நூறு ரூவாக சக்கரம் கெடைக்கும்"6

எனவே வறுமையின் கொடுமையால் அவமானத்தை ஏற்றுக் கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதை உணர்த்துகிறது.

பெண்ணிகளின் சிக்கல்கள்

பெண்ணியம் என்ற சொன்மை தமிழுக்குப் புதிதே தவிர; பெண் குறித்த பொருண்மை தமிழுக்குப் புதியதன்று. தொல்கபாப்பிய காலம், சங்க காலம் முதல் பெண்ணின் முழுப்பரிணாமும் உணர்த்தப்படுகிறது. பெண்ணைச் சக்தியின் குறியீடாகப் பெருமைப்படுத்தியும், அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டவளாகக் கருதி இழிவாகவும் நடத்தப்படுகிறாள். அவள் சமுதாயத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல விளைவுகளை சந்திக்கிறாள். பொருளாதார விடுதலை, பாலியல் விடுதலை, அடக்குமுறை பொருளாதாரச் சுதந்திரமற்ற தன்மை, சமநீதி வழங்கப்படாமை ஆகிய காரணங்களுக்கு பெண்களை இழிவுப்படுத்துகின்றனர்.

"பெண்ணுக்கென்று எழுதப்பட்ட சட்டங்களை சில இலக்கணங்களை மாற்றியெழுத பல முற்போக்கு வாதிகளால்கூட இயலவில்லை. ஆண் செய்யும் தவறை பெண் செய்தால் துரத்தி துரத்திக் கொல்கிறது இச்சமூகம்"7

பெண்கள் தங்களின் கருத்துகளை வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். தேவை உள்ள இடத்தில் பேச வேண்டும். தேவையற்ற இடத்தில் பேசுவதை தவிர்க்க வேண்டும்.

"என்னடி பெண்ணே நான் எவ்வளவு சொன்னாலும்
சொன்னபடி கேட்காமல் தோணும் விளைக்கின்றாய்"8

என்னுடைய மகளை நானே வளர்த்துக் கொள்கிறேன். அப்போதுதான் தூப்புத்தொழில் செய்யும் தொழிலாளர்களின் நிலைமை மாற வேண்டும். தூப்புத் தொழில்களுக்கு புதிய வகையான இயந்திரங்களை என் மகள் கண்டுபிடிப்பாள். பெரிய பதவிக்கு சென்று தொழிலாளர்களின் நிலைமையை மாற்றுவாள் என்று தன்னம்பிக்கையுடன் பூவரசி கூறுகின்றாள்.

"தூப்புக்காரி பூவரசியின் நடையில் வேகம் தெரிந்தது
வாவென்றால் வசந்தம் வராது
தேடி நின்றால் வாழ்வு வசப்படாது"9

எனவே பூவரசி தன்னுடைய குழந்தையை நன்றாக வளர்த்து தொழிலாளர்களின் நிலைமையை மாற்றும் தன்னம்பிக்கை நிறைந்தவளாக இருப்பதை அறிய முடிகிறது.

துரப்புத் தொழிலாளர்களின் சிக்கல்கள்

துப்புரவுத் தொழில் எனும் தூய்மைப்பணியை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களே இன்றுவரை பெரும்பாலும் செய்து வருகின்றனர். பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளிலும் மற்றும் மருத்துவமனைகள் ஆகிய இடங்களை துப்புரவுத் தொழிலாளர்கள் தூய்மைப் பணியைச் செய்கின்றனர். சமுதாயத்தில் துப்புரவுத் தொழிலாளர்களைக் கண்டால் மூக்கைப் பொத்தியும், ஏளனமாக பேசியும், குறைவானக் கூலி கொடுத்தும் மேலும் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

வயிறு ஒட்டிய நிலையில் சதைப்பற்று இல்லாத உடம்பில் நீலநிற புடவையைக் கட்டிக் கொண்டு தூய்மைத் தொழிலை செய்து கொண்டிருக்கிறாள். வாழ்க்கை முழுவதும் துன்பத்தையே அனுபவித்து வாழ்கிறாள். மனிதர்கள் உண்டாக்குகின்ற அழுக்குகளோடும், துர்நாற்றத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

> “பாதங்கள் இரண்டும் உலர்ந்து கறுத்து அழுக்கப்பட்டு அசிங்கமாகி விரல்களெல்லாம் உலர்ந்தது தெரிந்தது. ஒட்டிய வயிறு சதைப்பற்று இல்லாத மார்பகம். முகமெல்லாம் உழைப்பின் களைப்பு நிறைந்திருந்தது”10

உழைக்கும் வர்க்கத்தினர் வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் பொருளாதாரத்தில் பின்தங்கியே உள்ளனர். இந்த சமுதாயத்தில் உழைப்பிற்கேற்ற வருமானம் கிடைப்பதில்லை. பொருள்களின் விலை கூடிக் கொண்டே இருக்கும்.

> “உழைக்கும் வர்க்க மக்கள், தங்கள் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக உழைக்கின்றனர்”11

தாழ்த்தப்பட்ட தொழிலைச் செய்தால் அவர்களை ஏளனமாகப் பார்க்கின்றனர். வறுமையின் காரணமாகத்தான் இந்தத் தொழிலை செய்கிறார்கள் என்பதை யாரும் உணர்வதாக தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட தொழிலை செய்யும் மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியும், ஏழ்மை நிலையை மட்டும் கொண்டிருக்கின்றனர். சமுதாயத்தில் உழைப்பிற்கேற்ற பலன் இல்லாமல் போவதை நம்மால் உணர முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

> “அவள் பதட்டத்தை அறியாத காகித ரூபாய் கழிவு நீரில் அடித்துச் செல்லப்படுவதை கண்ணீரோட பார்த்து நின்றாள். எப்போமே உழைப்பு வீணாகிப் போகும்போது உள்ளம் உடைந்தே போகும். இத்தனை நேரம் அனுபவித்த அத்தனை உழைப்புக்கும் பலன் இல்லாதது போல் தோன்றியது”12

எனவே உழைத்த உழைப்பு வீணகிப் போகும்போது உள்ளம் உடைந்து போகும். துன்பத்தோடு அனுபவித்து உழைப்புக்கு பலனில்லாமல் போவதை எண்ணி கனகம் மனம் வருந்துகிறாள் என்ற நிகழ்வு நெஞ்சை நெகிழ வைக்கிறது.

முடிவுரை

உழைக்கும் வர்க்கத்தினர் இன்றைய சூழ்நிலையில் பலவிதமான சிக்கல்களை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளனர். உழைப்பாளர்களின் உழைப்பு சுரண்டப்படுகிறது. சமுதாயத்தில் பெண் தொழிலாளர்களின் உழைப்பானது உதாசீன செய்யும் நிலைதான் உள்ளது. சமுதாயத்தில் பெண்களை இழிவாக பேசுகின்றனர். பெண்ணைவிட ஆணுக்கு சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையும் உயர்வாக அளிக்கப்படுகிறது. சமுதாயத்தில் பெண்களுக்கு பலவிதமான கட்டுப்பாடுகளின் வாழ்க்கைமுறை அவலநிலையாக உள்ளது. ஆணும் பெண்ணும் சமம் என்று கூறுவதால் மட்டும் மாற்றம் உண்டாகாது. அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். தூப்புத் தொழில் செய்யும்போது அவர்களுடைய மனம் வேதனை கொள்கிறது. கழிவறை, சாக்கடை ஆகியவைகளை சுத்தம் செய்யும்போது ஏற்படுகின்ற துர்நாற்றம் மனிதனின் வாழ்க்கையையே வெறுக்க வைக்கிறது.

சான்றெண் விளக்கம்

1. கா.கோ. வேங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.328.
2. எஸ்.கோ. பாஸ்கல் கில்பர்ட், ஜெ.நாராயணன், (பொ.பெ.ஆ) சமூகவியலின்

அடிப்படைக் கோட்பாடுகள், ப.159.

3. சி.பாலசுப்ரமண்யம், வாழ்வியல் நெறிகள், ப.11.
4. மேலது, ப.11.
5. பரிமேலழகர் (உ.ஆ) திருவள்ளுவர், குறள், 322.
6. மலர்வதி, தூப்புக்காரி, ப. 42
7. மலர்வதி, தூப்புக்காரி, பக்.71-72.
8. முனைவர் ந.கிருட்டினமூர்த்தி, தமிழிலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள், ப.69.
9. மலர்வதி, தூப்புக்காரி, ப.133.
10. மலர்வதி, தூப்புக்காரி, ப. 38.
11. நா.சந்திரசேகரன், சமூகக் கட்டுப்பாட்டு படைப்பழகியல், ப.28
12. மலர்வதி, தூப்புக்காரி, ப. 34.

********* ********* ********** ********* ********* ********** ********** **********